922

Reg. No. M. 1534.



R. C. Training
School Magazine,
Trichinopoly.

OFFICE OF THE REGISTRAR OF ...
22 MAY 1929
MADRAS

திருச்சினுப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

போதனு விஷயப் பூங்கொத்து.

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 18.	ஏப்பிரல் 1929.	மலர் 10.

பத்திராதிபர் குறிப்புகள்.

... சென்னைக் கட்டாய ஆரம்பக் கல்வி சட்டத்
இ... கட்டாய ஆரம்பக்கல்வி ஏற்படுத்தப்பட்
... வு ... ஆரம்பப் பள்ளிக்கூடங்களின்
... வரை ஸ்தல ஸ்தானங்கள் நஷ்ட
... இருக்கிறதல்லவா?

***   ***

JL
ஹ21, N11PP
N29 . 18.10.
182282

இப்படி 5 வருஷங்களுக்குமாத்திரம் நஷ்ட ஈடு கொடுப்பது காணுதென்று ஆரம்ப ஆசிரியர்கள் கிளர்ச்சி செய்து வந்ததின் பயனுக மேற்படி நஷ்ட ஈட்டை சாஸ்வதமாகவே கொடுக்க வேண்டுமென்பதைச் சர்க்கார் ஒப்புக்கொண்டார்கள். அதற்கு மேல் என்ன ஆயிற்றென்று தெரியவில்லை.

* * *

போதனுமுறை பயின்று வெளியேறியவர்கள் ஆறுமாதத்திற்கொருமுறை செர்வீஸ் ரிபோர்ட் மூன்று வருஷகாலமாக அனுப்புவது கடமையென்று உணரக்கடவார்கள்.

சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தின் இடது பக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இனிய தொழில்கள்.

சில யோசனைகள். (தொடர்ச்சி.)

2. மாணவர்களுக்கு.

பள்ளிக்கூட நேரங்களிலும் பிறகும் செய்யப்பட்ட வெவ்வேறு விதமான மாதிரிப் பொருள்கள் பாடசாலையிலிருத்தல் வேண்டும். இச்செயல் தேர்ந்தெடுப்பதில் மனப்பான்மையையும் அழகிற்சிறந்த வேலையில் சக்தியையும் பிரதிபலிக்கிறது. இனிய தொழிலின் ஜாப்தா ஒன்று வகுப்பில் எல்லோரறியுமிடத்தில் வைக்கப்படவேண்டும். மாணவர்களும் தங்களுக்கேற்றதைப் பொறுக்கிக்கொள்ளலாம்.

1. அட்டை வேலை:—சிறு பெட்டிகள், சிறு வீடுகள், நாற்காலிகள், மேஜைகள், தொட்டிகள் அட்டையில் தயாரிக்கக் கூடும். சரியானபடி அளவு செய்வதற்கும் மற்ற பொருள்களையும் தன் மனத்தாலோ அல்லது பிறருதவியைக்கொண்டோ கற்பனை செய்யவோ இயலும்.

182282

2. மெழுக்கு வேலை:—இது குழந்தைகளுக்கு சுலபமான வேலை. பாலர்கள் ஒரு பொம்மை கொண்டுவந்து களிமண்ணில் ஓர் அச்சு தயாரித்து மெழுக்கை யுருக்கி மெழுக்குப் பிரதிமையை யடைகிறார்கள். மெழுக்குப் பொம்மை செய்யும் அநேக அங்கங்களினின்றும் இன்புறும் வேலை.

3. களிமண் வேலை:—இன்னுமொரு தகுதியான தொழில் அழகாய்ச் செய்து முடிக்கப்பட்ட மாதிரிகளைச் சுட்டுக் கண் காட்சிகளில் வைக்கப்படலாம்.

4. சீமைச் சுண்ணும்பு:—பானபாத்திரம், பன்னீர் சொம்பு, உலக்கை, செக்கு இவைகளைப்போன்ற சாதாரணப் பொருள்கள் கத்தியாலாவது பேனாவாலாவது செதுக்கிவிடக்கூடும்.

5. மணிகளும் தானியங்களும்:—பாலர்கள் சில ரூபங்களை வரைந்து கோடுகளின்மேல் மணிகளையும், தானியங்களையும் ஒட்டி அச்சித்திரங்களைப் பிரகாசமாகச் செய்கிறார்கள்.

6. தைக்கும் வேலை:—சிறுவர்கள் சில சித்திரம் வரைந்து ஊசியினால் கோடுகளில் துவாரமிட்டு அவைகளில் வர்ண நூல்களைச் செலுத்தி, அவற்றை அழகாகச் செய்கின்றனர். பெண்கள் இதற்கு அநேகமாய்த் துவாரமிட்ட அட்டைகளை உபயோகப் படுத்துகிறார்கள்.

7. சித்திரமெழுதுதல்:—பொருள் சித்திரம், மாதிரி சித்திரம், இயற்கை சித்திரம், வர்ண சித்திரம், பேனா மைவேலை இவற்றில் ஆஸ்தையுள்ளவர்களுக்கு உதவிபுரிந்து தாங்களே அச் சுவையை அபிவிருத்திசெய்யச் செய்தல்.

8. கையெழுத்து:—நன்றாய் எழுதக்கூடிய மாணவர்கள் பல ரகங்களுள்ள அச்சுகளைப்போல விளம்பரங்கள் எழுதச் செய்யலாம். இவைகளைப் பத்திரப்படுத்தி வைத்துக் கீழ் வகுப்புக்களில் வாசிப்பதற்கு உபயோகப்படுத்தக்கூடும்.

9. வர்ணக் காகிதங்களில் சித்திரவேலை:—கடைகளில் காணும்படியான விசிறிகள், தொங்கும் விளக்குகள் முதலியவைகள் செய்யப்படலாம்.

10. நெசவு:—வர்ணக் காகிதத்தில் நெசவுக்கான பிரதம பாடங்களைச் செய்தல், பனை ஓலைகளினால் பாய்களும், வர்ண நூல்களினால் பைகள் செய்வதும் காலவளவில் பழக்கிக்கொள்ளலாம்.

11. இலேசான மரவேலை:—உதாரணமாக: நாற்காலி, விசிப்பலகை, கட்டில், வண்டி, ஊஞ்சல், தொட்டில், பெட்டி.

12. பருத்தி, கம்பளித் துணித்துண்டுகள் :—இவைகளைக் கொண்டு பொம்மைகளைச் சிங்காரித்தல் முதலியவற்றைச் சிறுமிகள் அப்பியாஸிக்கலாம்.

13. நாணலும், மூங்கிலும் :—மாணவர்களுடைய சில விளையாட்டுக்கருவிகள், எண்ணும் சட்டம், திரைகள் நாணற்களால் செய்துவிடக்கூடும். பெரிய திரைகள் அலகுகளால் செய்யக்கூடும்.

14. தென்னங்குச்சிகள் :—பக்ஷிக் கூடுகளும், சிறிய தட்டிகளும் தென்னங்குச்சியினால் செய்யக்கூடும்.

15. இலை பதியவைத்தல்.

16. முத்திரை தலைப்படம் சேகரித்தல் :—உபாத்தியாயருக்கு இத்தலையங்கத்தின்கீழ் கொடுத்த குறிப்புகள் மாணவர்களுக்கும் சமதையாகவே பொருந்தும்.

எல்லா இனிய தொழில்களுள்ளும் செவ்வனே முடிக்கப்படும் வேலையைவிட சுயப்பிரயாசையே மெச்சத்தக்கது. ஆனபோதிலும் பின் கூறியதை உற்சாகப்படுத்தி, நன்கு மதிக்கப்பெற வேண்டும்.

முதலில் ஆசிரியர் ஒரு மாதிரியைக் குறித்தல்வேண்டும், இரண்டாவதாகப் பாடசாலையோவெனில் கை, கண், பயிற்சியில் அத்தகைய அபிவிருத்திக்குத் தக்க சந்தர்ப்பமளிக்கவேண்டும்.

(சுதேசமித்திரன், 27-9-'28.)

கிராம முன்னேற்றத்திற்கான ஆரம்பக்கல்வி.

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்ற யவை." (திருக்குறள்.)

பூவுலகின்கண் உள்ள மக்கட்கெல்லாம் மக்கட்பேற்றிற் பெரும் பேறில்லை எனப் பெரும் பேருகக்கருதப்படும் மக்களில் ஆண்மக்களுக்கே சிறப்பு மிகுதி என்பது ஆன்றோர் துணிபு. நன்கலனாகிய நன்மகனைப் பெற்ற தந்தையினான் அம்மகவுக்கு செய்யவேண்டிய கடமையென்னவெனில் அவனை அவையத்து முந்தியிருப்ப செயலேயாம்; யாங்ஙனம் எனில், சீரியகுணங்களையுடைய ஆசிரியனிடத்தே கற்றற்குரிய நூல்களைக் கற்பித்தல் முதலியனவாம்.

கல்வி :— மனிதர்களாலே தேடற்பாலனவாகிய பொருள்களுள் கல்விப் பொருளே சிறந்ததுவாம். கல்வியென்பது மூன்றே எழுத்துக்களால் ஆகிய சிறு வார்த்தையாயினும் அது மானிடர் யாவருக்கும் அத்தியாவசியமான ஞான உயிரை அளிக்கக்கூடிய பெரும் பொருளை அடக்கிக்கொண்டிருக்கிறது. சற்று ஆராயப்புகின் கல் என்ற பதம் மறைந்திருக்கும் பொருளையும் வி என்ற தொழிற்பெயர்விகுதி வெளிப்பட்டிருக்கும் பொருளையுங் குறிக்கிறது. இயற்கையாய் அமைந்து மறைந்து கிடக்கும் ஓர் பொருளை விளக்கி வெளிப்படுத்தும் சாதனம் என்று இதற்குப் பொருள் கூறலாம். கல்வி என்பதற்கு தோண்டி ஆராய்தல் என்று மற்றுஞ் சிலர் கூறுவர். தற்கால கல்விசங்கத்தார் கல்வி விஷயமாக மூன்று முக்கிய பிரிவுகளை அமைத்திருக்கின்றனர். அவைகள் முறையே ஆரம்பக்கல்வி, மத்திய கல்வி, உயர்தரக் கல்வி என்பனவேயாம்.

ஆரம்பக்கல்வி :— முதற்பிரிவில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலைகள் கிராமவாசிகளாயுள்ள விவசாயிகளுக்கு மிக்க அவசியமானதால் அன்னோரின் தொழில்களுக்கு அவசியமான முறைகளை அவைகளில் ஸ்தாபிப்பதன்றி உயர்தர கலாசாலைகளுக் கவசியமான எவ்வித தொடர்ச்சிகளையும் இப்பாடசாலைகளில் நுழைத்தல் தகுதியன்று. இளங்கண்களையுடைய சிறுவர்கள் ஆரம்பப் பாடசாலைகளில் அரிவரி தொடங்கும்போதே வெள்ளைத் தாளில் அச்சியற்றிய புத்தகங்களை கூர்மையாய் நோக்கி படிக்கச் செய்வதினாலுண்டாகிய பயனே அங்ஙனம் செய்வதால் சிறிது காலத்திற்கெல்லாம் கண்கள் கெட்டுவிடுகின்றன. ஆதலால் ஆரம்பப் பாடசாலைகளில் சுவடிகளையே பான்மையும் உபயோகப்படுத்தினால் சிறுவர் நெடுநாள் படிக்க உதவியாயும் ஏழைகள் செலவின்றி, இலவசமாய் சம்பாதித்துக்கொள்ளவும் அனுகூலமாகும். எல்லாவித இராஜாங்கத்தாருக்கும் ஆரம்பக்கல்விதான் அஸ்திவாரம்போன்றது. பஞ்சாபில் ஆயிரம் இடங்களில் கட்டாய இலவச ஆரம்பக்கல்வி முறையே அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கட்டாய கல்விமுறையை பலவிடங்களில் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். கட்டாய முறையில்தான் ஆரம்பக் கல்வியை பரவும்படி செய்யவேண்டும். விவசாயியின் குமாரனுக்கு விவசாய வேலையில் பங்கமேற்படாதபடி கல்வி கற்பிக்கவேண்டும். அங்ஙனம் கல்வியைப் புகட்டினால் வெகு சீக்கிரத்தில் ஆரம்பக் கல்வியில் நாம் உண்மையான முன்னேற்றம் அடைய முடியும். ஆரம்பப் பாடசாலைகளில் கைத்தொழிற் கல்வி போதிக்கப்படவேண்டும். உதாரணமாக: விவசாய சம்பந்தமான கல்வி,

ஆலை, நெசவு முதலியவற்றைப்பற்றி வற்புறுத்திக் கற்பித்தல் வேண்டும்.

விவசாயக்கல்வி :—நன்செய் புன்செய் நிலங்களை சாகுபடி செய்யும் விதத்தைக் கற்பித்து, ஆசிரியர்களே உதாரணமாக ஒரு நிலத்தை பண்படுத்தச்செய்து, மண்ணின் விதங்களைக் கற்பித்து சரியான விளைவு இல்லாவிடில் எருவின் உதவியால் சாகுபடி செய்யவேண்டும். எருவின் விதங்களை எடுத்துச்சொல்லி எவ்வித எருவையிடவேண்டும் என்று கூறவேண்டும். பின்னர் விதைகளை சர்க்கார் விவசாய விதை உறைக்கிட்டங்கியில் விற்கும் விதைகளைக்கொண்டும் சேகரித்த விதைகளைக்கொண்டும் சாகுபடி செய்தல்வேண்டும். பயிர்களின் விதத்தைக்கொண்டு இயற்கை தாவரபாடமும் கற்பித்தல் வேண்டும். இவ்வாறு செய்வதினால் அநேக பயிற்சிகளைப் போதிக்கலாம். கதிர்களின் அமைப்பைக் கொண்டு எவ்வளவு நெல்லை அடையலாம் என்று போதிக்கப் படுதல் வேண்டும்.

புன்செய் நிலங்களின் அமைப்பைப்பற்றியும் அதில் ஒவ்வொரு வித பயிரையும் சாகுபடிசெய்து ஒவ்வொரு பயிரின் விதத்தைப் பற்றியும் போதிக்கப்படுதல்வேண்டும். பயிரின் பலன்களைக் கொண்டு அவைகளை எவ்விடத்திற்கு ஏற்றுமதியாக்கலாம் என்பதைக் கூறவேண்டும். பஞ்சு முதலிய கைத்தொழிலுக்கு வேண்டியவைகளை சாகுபடி செய்து பஞ்சை எடுத்து கைத் தொழில் ஆரம்பித்தல்வேண்டும்.

கைத்தொழில் :—பஞ்சைக்கொண்டு நூல் நூற்க மாணவர் களுக்கு கற்பித்துத் தருதல்வேண்டும். கைராட்டினங்களைக் கொண்டு எல்லா மாணவர்களையும், நூல் நூற்றியபின் கூடிய வரையில் சொந்த இயந்திரங்களைக்கொண்டு வஸ்திரங்கள் செய்யச் சொல்லவேண்டும். இத்தொழிலில் மாணவர்களை போட்டியில் விட்டு அதிகமாக நெய்தவர்களுக்கு பரிசு கொடுக்கவேண்டும். அங்ஙனம் செய்தால் கைத்தொழில் கிராமங்களில் பரவுமென் பதில் ஐயமில்லை.

தச்சுவேலையில் சிறுவர்களைப் பழக்குதல் வேண்டும். சிறு சாமான்களைச் செய்து பெஞ்சுகள் போன்றவைகளை செய்யக் கற்பித்தல்வேண்டும்.

ஆலை :—கிராமங்களில் விளையும் கருப்பங்கழிகளை சீக்கிரத் திலும், நன்றாகவும் அரைத்து சாரை எடுக்கும்படியான விலை சரசமாயுள்ள ஆலைகளை வரவழைத்து சாற்றைப் பிழியச்செய்ய வேண்டும். சாற்றை வெல்லமாகவும், சர்க்கரையாகவும் செய்யக்

கற்பித்தல் வேண்டும். வெல்லத்தை இன்ன இடத்திற்கனுப்பினுல் நல்ல லாபங் கிடைக்குமென்று கூறுதல்வேண்டும்.

சுகாதாரக்கல்வி :—மக்களுக்கு சுகாதாரம் மிக்க அவசிய மாதலின் சுகாதாரத்தைப்பற்றி மாணவர்களுக்குப் போதிக்கப்படு தல்வேண்டும். போதித்தல் மட்டுமல்லாது சுகாதாரத்திற்கு வேண்டிய சாதகங்களை செய்தல்வேண்டும். கிராமத்தில் பிளேக், காலரா முதலிய தொத்து வியாதிகள் பற்ருதபடி வீடுகளினண் டையில் உள்ள குப்பை கூளங்கள், சாக்கடைகள் முதலியன துர்நாற்றம் விளைவிக்கின் அவைகளை அப்புறப்படுத்துதல் வேண்டும். வீடுகளை சுத்தமாக வைத்திருக்கும்படி செய்தல் வேண்டும். அடிக்கடி சுவர்களை சுண்ணும்பு அடிக்கச் செய்தல் வேண்டும். கிராமத்திலுள்ள ஏரி, குளம், கிணறு முதலிய நீர் நிலைகளை சுத்தமாக வைத்திருக்கும்படி எச்சரிக்கவேண்டும். நீர்நிலைகளினண்டையில் மரம், செடி, கொடி முதலியவைகள் வளராதபடி பாதுகாக்கவேண்டும் அடிக்கடி சுகாதார ஆபீஸரிடம் சென்று மருந்து வாங்கிவந்து ஜலத்தில் கலந்து சுத்தம் செய்யவேண்டும். அப்படி ஏதாவது நோய்கள் பற்று மாயின் நோயாளியின் வஸ்திரங்களை அக்கினியில் போடச்செய்து வீட்டை சுத்தஞ்செய்து சுகாதார ஆபீஸருக்கு அறிவித்தல் வேண்டும். கிராமத்தார்களை வென்னீரையே குடிக்கச் செய்தல் வேண்டும். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் அம்மை குத்த தெரிந் திருத்தல்வேண்டும். இங்ஙனம் செய்தால் கிராமத்தாருக்கு ஆசிரியர்மீது பற்றுண்டாகி அன்னவர்களை மிக்கக் கொண்டாடா நிற்பர்.

பொது அறிவு சம்பந்தமானவை :—நாம் கொடுக்கும் நிலவரி என்னவாகிறது என்பதையும், நம்மை ஆளும் அரசாங்கத்தாரைப் பற்றியும், தபால், தந்தி, நியாயசபை முதலியவற்றையும் பிள்ளை களுக்கு பிற்கால வாழ்விற்கு அவசியமானவற்றைப்பற்றியும் போதித்தல் மிக்க அவசியம்.

பூகோள சம்பந்தமான பாடங்களை அவசியம் போதிப்பதால் இன்ன இடத்தில் இன்ன பயிர் விளைகிறதென்பதையும் பிரயாணம் செய்வதற்கும் மிக்க அவசியமானவையாகும்.

ஐக்கிய நாணய சங்கத்தின் பயனும், யூனியன் முதலிய வற்றின் சாதகங்களும் அதிகமாகப் போதிக்கப்படுதல் வேண்டும். கிராமத்திற்கு வேண்டிய அதிமுக்கியமான ஐக்கிய நாணய சங் கத்தில் ஈடுபடுதல்வேண்டும்.

ஆரம்ப ஆசிரியர்கள்:—மலரோடு மணங் கலந்திருப்பது போலவும், மாணிக்கக் கல்லோடு ஒளி ஊடுருவியிருப்பதுபோலும் சிறுவர்களிடத்தில் உள்ள அறிவு பொதிந்து கிடக்கின்றது. மலரின் மணத்தை வெளிப்படுத்துவதற்கு கதிரவன் ஒளி இன்றியமையாததுபோன்று கல்லின் ஒளியை வெளிப்படுத்துவதற்கு சாணை தேய்ப்பவன் உதவி இன்றியமையாதன. அதுபோல ஒரு குழந்தையினிடத்து உள்ள கல்வியை வெளியாக்குவதற்கு சில சாதனங்கள் இன்றியமையாதன. மாணவர்கள் அறிவு வளர்ச்சிக்கு அதிமுக்கியமாக இருப்பவர்கள் ஆசிரியர்களே. ஆசிரியரில்லையேல் உலகு ஏது? ஆசிரியர்களிடத்து அருமையாகக் காண வேண்டிய சில குணங்களுண்டு. ஆசிரியர்களது சொற்கள் இனிமையுடையனவாகவும் வெகுதூரம் கேட்கக்கூடியனவாகவுமிருத்தல் வேண்டும். ஆசிரியர்களது வாய்ச்சொல் மாணவர்களது மனதைத் தொடவேண்டும்; தொட்டு இழுக்கவேண்டும்; இழுத்துத் தன் வசமாக்க வேண்டும். இனிய குரலோடு மட்டும் இருத்தல் போதா. மாணவர்கள் செவியில் விழவேண்டும். ஆசிரியர் முகத்தில் சாந்தம் அமைந்திருத்தல்வேண்டும். கோபக் குறிகள் இருத்தல் ஆகாது. பார்வையும் சாந்தமாயிருத்தல் வேண்டும். ஆசிரியர்களுக்கு ஞாபக சக்தி இன்றியமையாததாகும். ஆசிரியர் கல்வித்துறையில் ஓயாது கற்கவேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் புதுப் புது விஷயத்தை போதித்தல்வேண்டும். தன் வகுப்புப் பாடங்களை ஆசிரியர் முன்னதாகவே படித்து உதாரணங்களால் தெளிவுறச் செய்தல் முதலியவற்றை ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஒவ்வொரு பாடசாலையும் ஒரு சிறு இராஜ்ஜியமாகவும் பிள்ளைகள் அதில் வசிக்கும் குடிகளைப் போலவும், உபாத்தியாயர் ஓர் அரசனைப்போலவுமாம். ஆசிரியர் அதைரியப்படக்கூடாது. விடாமுயற்சியுடையவராயும், பட்சமுடையவராயுமிருத்தல் வேண்டும். ஆசிரியர் பொறுமையுடையவராய் இருக்கவேண்டும். சிலவேளை பிள்ளைகள் வருந்துவார்கள்; சிலவேளை சொல்வதை செய்யமாட்டேன் என்பார்கள்; தான் ஒரு விஷயத்தை நன்றாய்க் கற்பித்தபிறகு அதையே திருப்பிக் கேட்க பதில் சொல்லமாட்டார்கள்; சிலவேளை நாம் செய்யும் நன்மைக்கு தீமை செய்ய நினைப்பார்கள்; இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் முன் கோபப்படாமல் ஆசிரியர் பொறுமையாயிருத்தல்வேண்டும். ஆசிரியர் நன்னடக்கையுடையவராய் இருக்கவேண்டும். ஆசிரியர் படித்தவராயிருக்கவேண்டும். கற்பிக்கும் வழி தெரிந்தவராயிருக்கவேண்டும். ஆசிரியர் போதனா சாஸ்திரமாகிய மனோதத்துவ புத்தியைப்பற்றியும் தெரிந்திருத்தல்வேண்

டும். உபாத்தியாயர் பெருந்தன்மையுடையவராயும், தொழிலில் பக்தியுடையவராயுமிருப்பதுமன்றி எதார்த்தமுள்ளவராயுமிருத்தல் அவசியம். உபாத்தியாயருக்கு ஆராயுந்தன்மை வேண்டும். கல்வி கற்பிக்கும் தொழிலை ஆசிரியர் ஆயுள்பரியந்தம் செய்யத் தக்க தொழிலாக மதித்தல்வேண்டும். உபாத்தியாயருக்கு அலைமதியான தீர்மானம் வேண்டும். அங்கவீனமில்லாமல் ஆசிரியர் நல்ல தேகசௌக்கியமுடையவராயுமிருக்கவேண்டும். குழந்தைகளின் இயற்கையைப்பற்றிய அறிவு வேண்டும். இந்த அறிவு குழந்தை சுபாவத்தை தாமே நேரில் ஊன்றிப்பார்த்துவந்த அனுபவத்தாலும் சரீர தத்துவசாஸ்திரம் முதலியவைகளை வேண்டிய மட்டும் கற்றல் வேண்டும். தாவர வர்க்கம் ஜீவவர்க்க முதலியவைகளைப்பற்றி நன்றாய்க் கற்றிருத்தல் வேண்டும். சாதாரண கைத்தொழிலில் அப்பியாசம் இருக்கவேண்டும். உபாத்தியாயர் தம் கடமைகளை நன்றாய்ச் செய்ய தைரியமும் ஊக்கமும் உடையவராயிருத்தல் வேண்டும். "ஓதுவ தொழியேல்" என்பதை ஆசிரியர் கைக்கொள்ளவேண்டும். ஞானத்தையே நாடிநிற்கவேண்டும். பிறந்த ஏழுவயது வரையில், குழந்தையின் மூளை வெகு விரைவாய் வளர்கிறது. இவ்வளவு துரிதமாய் வளர்ந்துவருங்காலத்தில் புத்திக்கு அதிக சிரமங் கொடுக்காமல் அதிக ஜாக்கிரதையாகப் பார்த்துவரவேண்டும். குழந்தைக்கு வெகுநேரம் வரைக்கும், ஒரே விஷயத்தை நாடி நிற்கவியலாது. ஆனதால், எந்தப் பாடத்தையும் அடிக்கடி மாற்றவேண்டும். ஒவ்வொரு பாடத்திற்கும் அதிக கால அளவு கூடாது. அசைவற்று உட்கார்ந்திருப்பது சிறுவர்களின் இயல்புக்கு மாறாகும். ஆதலின், உலவுவதற்கும், திடம் தரும் ஆட்டங்கள் ஆடுவதற்கும் பலவகைப் பொருள்கள் கொண்டு தன்னிச்சையாய் மனதிலுள்ளதை காரியமூலமாய்ச் செய்வதற்கு அடிக்கடி அவகாசம் கொடுக்கவேண்டும். குழந்தை இயங்குவதற்கு ஏராளமான அவகாசம் கொடுப்பதால் அதன் மூளை அபிவிருத்திக்கே செய்கிறோம். "தொட்டிற் பழக்கம் அந்தியமட்டும்" என்றவாறு இளமையில் ஏற்பட்ட பழக்க வழக்கங்கள் பிற்கால முழுவதும் வருத்துமாதலின் பணிவு, பொறுமை, வேளை தப்பாமை, சுசியாயிருத்தல் முதலியவைகளை குழந்தைகள் அறிந்துகொள்ளும்படி செய்யவேண்டும். தயை, மரியாதையான காரியங்கள் இன்னவை என்று காட்டி அவற்றைச் செய்ய உற்சாகப்படுத்தல்வேண்டும்.

ஆசிரியர் தமது நடை, உடை, பாவனை, பேச்சு இவைகளை ஒருபோதும் மறக்கக்கூடாது. ஏனெனில் சிறு பிள்ளைகள் பார்ப்பதையெல்லாம் தங்களையுமறியாமல் கண்டுபாவிக்கிறார்கள்.

182282

ஆசிரியரை பார்த்துத்தான் பெரும்பான்மையாய் பிள்ளைகள் தங்கள் நோக்கங்களை ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். ஆதலின், குழந்தைகளை நல்ல வழிகளில் செலுத்தவேண்டும்.

கிராம ஆசிரியரின் இதர அலுவல்கள்.

வைத்தியம் :—ஒவ்வொரு கிராம ஆசிரியரும் சிறிது வைத்தியம் தெரிந்திருத்தல் அவசியம். அல்லது நகரங்களில் சென்று மிக்க அவசியமான ஔடதங்களை வாங்கிக்கொண்டு வந்து வைத்திருத்தல் வேண்டும். ஏனெனில் திடீரென்று கிராமத்தில் யாருக்காவது பாம்பு முதலிய விஷ ஜெந்துக்கள் கடித்து அபாயத்தை உண்டாக்கிவிட்டால் வைத்தியர் வருவதற்குள் சிகிச்சை செய்ய உதவியாயிருக்கும். ஆசிரியர் அவசியம் "முதலுதவி" தெரிந்திருத்தல் நலம். கிராமத்தாருக்கு பெரும் பயனைப் பயக்கும்.

ஜோஸியம் :—ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் சொற்ப ஜோஸியம் தெரிந்திருத்தல் நலம். ஏனெனில், கிராமத்தார் ஏர்கட்டவும், ஊர் பிரயாணம் செய்ய முதலியவற்றிற்கு நல்ல நாளைக் கேட்பார்களாதலின் விசேஷ தினங்களையும் திருவிழா நாட்களையும் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும்.

தபால் வேலை :—ஆசிரியர் கிராமத்தாருக்கு வேண்டிய கவர், கார்டுகள், ஸ்டாம்புகள் வாங்கி வைத்திருத்தல் வேண்டும்.

வியாபாரம் :—கிராம ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ஐக்கிய நாணய சங்கத்தில் ஈடுபடவேண்டும். தாம் சந்தாதாராகவாவது இருந்து கிராமத்தில் விளையும் பொருள்களை ஐக்கிய நாணய சங்க மூலமாய் விற்பனை செய்யவேண்டும். நாம் ஏதாவது ஒரு பொருளை குறைந்த விலைக்குப் பெற விரும்பினால் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பணம் சேகரித்து ஆசிரியர் உதவியாலும் ஐக்கிய நாணய சங்க மூலமாயும் குறைந்த விலைக்குத் தருவித்துக்கொள்ளலாம்.

இப்படியே கிராமத்தாருடன் பழகி அவர்கள் லாப நஷ்டங்களுக்கு தாம் அனுதாபங் காட்டி பாடுபட்டு கல்வியை மட்டும் பரப்பாது சுயநலத்தொண்டராக விளங்கவேண்டியது உத்தம ஆசிரியரின் அம்சம். ஆசிரியர் அன்றாடம் பெற்றோர்களிடம் சென்று பள்ளிக்கு வராத மாணவர்களைக் காரணம் வினவுதலும் புதிய மாணவரை பள்ளியில் சேர்ப்பதிலும் கண்ணுங்கருத்துமாயிருத்தல் வேண்டும். இவ்வாறு செய்வரேல் கிராமத்திற்கு உதவி புரியும் உத்தம புருஷரென மதித்துக் கொண்டாடப்படா நிற்பர்.

மாணாக்கர் :—சொலற்கருஞ் சிறப்பினையுடைய நல்லாசிரியனை அடுத்து, வந்தனை வழிபாடு முதலியன குறைவறப் புரிந்து

பாடங் கேட்போரே மாணுக்கராவர். மாணவர்கள் உத்தம மாணுக்கர், மத்திப மாணுக்கர், அதம மாணுக்கர் என முப்பிரிவில் உட்பட்டவர்களாதலின் இவர்களை கல்வியென்னும் கடலைக் கடந்து கரைசேர்ப்பிப்பதில் பல முறைகளைக் கையாடுவது நமக்கு அத்தியாவசியமாகும். உத்தம மாணுக்கருக்குக் கல்வி பயிற்றும் விஷயம் அமைதியான கடலில் மீகாமன் தன் மரக்கலத்தை கஷ்டமின்றிச் செலுத்துவதை யொக்கும். அதம மாணுக்கர் விஷயத்திலோ, ஆசிரியர் கடுமையான புயற்காற்றினுல் கொந்தளிக்கும் கடலில் தத்தளிக்கும் மரக்கலத்தை நடத்தத் திசை தெரியாமல் மயங்கும் மீகாமனுக்கு தம்மை உவமித்துக் கூறின் யாது குற்றமோ? ஆதலின் அவர்களை அசட்டைசெய்து புறக்கணியாது அவர்களைக் கல்விபயிலச் செய்வதில் பல கஷ்டங்களிருப்பின் அவைகளைப் பாராட்டாது அவர்களுக்காக பாடுபடுவது நமக்கின்றிமையாத பொறுப்பான கடமையாகும். இடையன் தன் ஆடுகளுக்காக கவலைப்படுகிறுன் என்பதுபோல் தன் மாணவர்களைக் காப்பாற்றுதல் வேண்டும்.

ஆசிரியர் பலருள்ளும் பாலருக்கு கல்விபயிற்றும் ஆசிரியர் படுங் கஷ்டத்தை அளவிட்டுக் கூறமுடியாது. ஏனெனில், இயற்கையிலேயே பாலர்கள் பல விளையாட்டுகளில் நாட்டங்கொண்டவர்களாதலின் அவர்களை கல்வித்துறையில் பழக்குவது மிகவும் அரிது. ஆதலின் அவர்களுக்கு விளையாட்டின் முறையாக பாடங் கற்பித்தல் சிறந்த முறையாகும். சிறுவர்களுக்குக் கதைகள் என்றுல் மிகுந்த பிரியம். ஆதலின் கதாரூபமாக போதிக்கப்படுதல் வேண்டும். சிறுவர்கள் மற்றவர்கள் செய்வதைக் கவனித்து அதன்படி செய்ய முயலும் சக்தி மிகுந்திருப்பவர்களாதலின் சிறுவர்களுக்கு எல்லா விஷயங்களையும் நன்மாதிரி நடித்துக்காட்டி நல்ல வழியில் திருப்பவேண்டும்.

மாணவர்க்கு ஒரு புதிய விஷயத்தை போதிக்கப் புகுங்கால் அதைப்பற்றிய பல பகுதிகளையும் ஒரே நாளில் போதிக்க முயலவதிலும் படிப்படியாக அவ்விஷயத்தின் பல பாகங்களை மாணவர்கள் மனதில் பதியச்செய்வது மேலாகும். பந்தயத்தை ஜெயிக்க முயன்ற முயலானது ஒரே ஓட்டமாய் ஓடி பின்னர் இடையில் தூங்கி பந்தயத்தை இழந்ததுபோலும், மேய்ச்சல் தரைக்குக் கொண்டுபோகப்பட்ட மாடு புல் மேயாமல் காலத்தை வீண் போக்கி சாயங்காலத்தில் வீட்டுக்குத் திரும்பும்போது அவசரமாயும், ஆத்திரமாயும் மேயத்தலைப்பட்டதுபோலும் இராமல் மந்தகதியாய் இடையருது நடந்து நடந்து பந்தயத்தை ஜெயித்த

ஆமையின் முன்மாதிரியை நமக்கு நன்மாதிரியாக வைத்து கல்வியை மாணவருக்குப் புகட்டுவது சாலச்சிறந்ததாகும். "Slow and steady wins the race."

போதகாசிரியரின் கடமை :—ஆசிரியர்கள் அநுசரிக்கவேண்டிய முறை அநேகமிருப்பினும் அவற்றின் முதன்மையானதும் இன்றியமையாததுமான கடமை, தம் கையின் கீழ் ஒப்புவிக்கப் பட்டிருக்கும் மாணவர்கட்கு எவ்விஷயங்களையும் தாம் எடுத்துக் காட்டுபவராக இருக்கவேண்டும். எடுத்துக் காட்டுவதற்கு தாம் வழிகாட்டியாயிருக்கவேண்டும். உதாரணமாக : தம் மாணவர்கள் ஒழுங்காயும் கிரமமாயும் பள்ளிக்கு வர அவாவுறும் ஆசிரியர் தாமே ஒழுங்காயும் கிரமமாயும் பள்ளிக்குச் செல்லுதல்வேண்டும். உடைகள் யாவும் சுத்தமாயிருத்தல்வேண்டும். பேச்சு வார்த்தைகளிலும் நல்லொழுக்கங்களிலும் அன்னவர்களுக்கு நன்மாதிரி காட்டுவது மிக்க அவசியம். தம் மாணவர்களை அன்பு என்னும் பாசக் கயிற்றால் பிணிப்பது அவசியம். ஏனெனில், எவ்வளவு பக்ஷபாதமற்ற அன்பை மாணவர்களிடம் காட்டுகிறார்களோ, அவ்வளவு ஆசிரியரின் அன்பு மாணவர்கள் இருதய கமலங்களில் நன்றாகப் பதியும். மிகுந்த துஷ்டனாயுள்ளவனும் யாவர்க்கும் அடங்காத பிள்ளையையும் ஆசிரியர் அன்பு என்னும் ஔடதத்தால் குணப்படுத்தவேண்டும். அன்பு எல்லாவற்றையுந் தாங்கும். சகலத்தையும் விசுவசிக்கும் ஆசிரியர் தம் கையில் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் மாணவரை தம் சொந்த குழவிகளென பாவித்து அவர்கள் சன்மார்க்க விஷயங்களிலும் தேர்ச்சியடைவதில் கருத்துமாயிருப்பது ஆசிரியரின் கடமையாகும். அவ்வாறு செய்வது, மலர் ஓரிடத்தில் நின்று புஷ்பித்தபோதிலும் அதன் நறுமணம் அதைச்சுற்றிலுமுள்ள பல இடங்களில் பரவி பரிமளிப்பதுபோன்றும், பலாக் கனி இருக்குமிடத்தை நாடி ஈக்கள் வந்து மொய்ப்பதுபோலவும், ஆசிரியரின் கல்வி புகட்டுந் திறமை, நற்கீர்த்தி முதலிய சற்குணங்கள் பலவிடங்களிலும் பரவுவது அவசியம். ஆசிரியரது குணாதிசயங்களையும் பகுத்தறிவதில் மாணவர்களுக்கு மிஞ்சினவர்கள் வேறொருவருமிலர். தாம் உபாத்திமைத்தொழிலில் புகுந்தவுடன் நமக்குத் தெரியாத காரியம் ஒன்றுமில்லையென்றும், நாம் சம்பூர்ண அறிவை அடைந்திருக்கிறோமென்றும் கர்வங்கொள்ளாதிருப்பாராக. ஏனெனில், "முற்றுமுணர்ந்தவரில்லை முழுவதும் கற்றனமென்று களியற்க", "தம்மினுங் கற்றாரை நோக்கிக் கருத்தழிக, கற்றவெலாம் எற்றேயிவர்க்கு நாம் என்று" என்னும் செய்யுட்களையும், "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்பதையும் ஞாபகத்தில் கொண்டுவரவேண்டும்.

இவ்வுலகின்கண்ணுள்ள எத்தொழிலிலும், மாணவர்கட்கு கல்வி புகட்டும் தொழிலே சிறந்தது. பாவத்தைப் போக்கி புண்ணியத்தை நமக்கும் மாணவர்கட்கும் நிலைநாட்டும் மேன்மையான தொழிலெனக் கூறலாம்.

கிராம ஆசிரியர்கள் கிராமத்தாரைப் பகைத்தலொண்ணாது. அவர்கள் இரு பிரிவினராகப் பிரிந்து சண்டையிட்டுக்கொண்டாலும் ஆசிரியர்கள் ஒரு பிரிவினரிடம் பற்றுள்ளவராயிருத்தல் தகாது. ஆசிரியர்கள் தங்கள் பாடசாலையைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். நல்ல படங்களை மாட்டியிருத்தல்வேண்டும். கூடியவரையில் வகுப்புகளாகப் பிரித்தல் நலம். அன்னியர் யாராவது வந்தால் பாடசாலையென சீக்கிரத்தில் தெரிந்துகொள்ளுமாறு அலங்கரித்திருக்கவேண்டும். கிராமத்தார்களை தம் நற் செய்கைகளினால் வசியப்படுத்தி அன்னவர்களைக்கொண்டு :

வாசகசாலை :—நல்ல புத்தகங்களை வாங்கி அமைத்து, வர்த்தமானப் பத்திரிகைகளை வரவழைத்து வாசிக்கச் செய்யவேண்டும்.

சங்கங்கள் :—ஆசிரியர்கள் கிராமத்தாரை வாரத்திற் கொருதரம் சபைக் கூட்டி கல்வியை பரப்பவேண்டுவனவற்றில் கவலையெடுத்துக்கொள்ளலாம்.

இரவு பள்ளிக்கூடம் :—கிராமத்தார்கள் பகலெல்லாம் வேலை செய்துவிட்டு இராக்காலங்களில் ஓய்ந்திருக்குங்கால் அன்னவர்களுக்குக் கல்வி புகட்டவேண்டும். இராப் பள்ளிச்கூடம் கிராமத்தாருக்கு மிக்க அவசியமாதலின், பகற் பள்ளிக்கூடத்தில் வாசித்த மாணவர்களன்னியில் வயதானவர்களை கல்வித்துறையில் பழக்கவேண்டும். இராக்காலத்தில் போதிக்கும் கல்வியானது கிராமத்தாருக்கு அவசியமானதாயிருக்கவேண்டும். இராக்காலங்களில் பல வர்த்தமானங்களையும், பத்திரிகைகளையும் வாசிக்கச் செய்ய அன்னவர்களின் அறிவு பலவிதத்திலும் விருத்தியாகிறது.

K. V. Radhakrishnan.

கணித பாடத்தைப்பற்றிய சில குறிப்புகள்.

நான் தற்செயலாய் ஓர் பள்ளிக்கூடத்தில் பிரவேசித்த போது, 5-வது வகுப்பு மாணவர்கள் ஓர் கணக்கைச் செய்து கொண்டிருந்தனர். அக்கணக்கை இங்கே கொடுக்கிறேன்:

A, B, C என்னும் மூன்றுபேர்களுக்கும் மொத்தம் கிடைத்த ஓட்டுகள் 59,896. B-ஐக்காட்டிலும் A-க்கு 2,166 ஓட்டு அதிகமாயும் C-ஐக்காட்டிலும் B-க்கு 1157 ஓட்டு அதிகமாயும் கிடைத்தனவென்றால், ஒவ்வொருவனுக்கும் கிடைத்த ஓட்டுகள் எத்தனை?

இக்கணக்கை உபாத்தியாயர் கற்பித்த முறையைக் கூறுமுன்னால், இக்கணக்கைப்பற்றிக் கூறுவோம். ஏதோ கணக்குப் புத்தகத்திலிருப்பதை உபாத்தியாயர் உள்ளபடியே கொடுத்துப் போய்விட்டார். சிறு குழந்தைகளுக்கு A, B, C என்றால் என்ன விளங்கும்? அவர்களுக்கு எதைக் கூறும்? என்ன உருபிகரத்தை அவர்கள் உருபிகரமுன் கொண்டுவந்து சேர்க்கும்? இதற்குப் பதிலாய், மாணிக்கம், முத்து, வையாபுரி என்றுவது, அருள், கருணை, அந்தோனி என்றுவது சொன்னால் பிள்ளைகளுக்கு சுலபமாய் விளங்காதா?

கிராமாந்தர பாடசாலைகளில் ஓட்டுகள் என்றால் விளங்குமா விளங்காதா என்று உபாத்தியாயர் முன்னரே அறியலாகும். ஏற்கனவே தெரிந்திருந்தாலும், சில வார்த்தைகளைக்கொண்டு இதைப்பற்றி கிராமாந்தர இளம் மாணவர்களுக்கு அறிவிக்க வேணும்; இராஜாங்கத்தைப்பற்றியும் சற்றே சொல்லிக்கொடுக்க இது ஏற்ற தருணம். அப்பள்ளிக்கூடத்து மாணவர்களை ஓட்டுகள் என்னவென்று நான் கேட்டபோது சிலருக்கு ஒன்றுமே தெரியாதென்றுவிட்டார்கள்; சிலர் வீட்டின்மேல் போடும் ஓடுகள் என்றார்கள். கணிதப் புத்தகங்கள் எழுதுகிறவர்கள் சாதாரணமாய்ப் பட்டணவாசிகள்; உபாத்தியாயர் பள்ளிக்குப் போகுமுன், புத்தகத்திலிருக்கும் கணக்குகளை தன் ஊருக்கும் மாணவருக்கும் ஏற்றவிதத்தில் திருத்தி மாற்றி எழுதிக்கொண்டுபோக வேண்டும்.

உபாத்தியாயரை அக்கணக்கைக் கரும்பலகையில் செய்யச் சொன்னேன். அவர் செய்த வழியை இங்கு குறிக்கிறேன்:

A, B, C எனும் மூவரின் ஓட்டுகள் 59896.

A-க்கு அதிகமான ஓட்டுகள் 2166 + 1157 = 3323.

B-க்கு அதிக ஓட்டுகள் 1157.

மொத்தம் அதிக ஓட்டுகள் 3323+1157=4480.

மொத்த ஓட்டுகள்	59896
அதிக ஓட்டுகள்	4480
மூவருக்கும் கொடுக்க இருப்பது	55416

C-க்குக் கிடைத்த பாகம் 55416÷3=18472

B-க்குக் கிடைத்த ஓட்டுகள் 18472+1157=19629.

A-க்குக் கிடைத்த ஓட்டுகள் 18472+3323=21795.

இதிலிருந்து மாணவர்கள் என்ன கற்றுக்கொள்வார்களோ தெரியாது? ஓர் புதுவிதமான கணக்கோ, கஷ்டமான கணக்கோ போடும்போது, செய்யும் வகையைச் சுலபமாய் அறியும்படி, ஏன் அத்தகைய சிறிய கணக்குகளைக் கொடுக்கலாகாது? உதாரணமாக 5 கல்லோ, 5 கொட்டையோ எடுத்துக்கொண்டு, யாக்கோப்பைவிட சுந்தரத்துக்கு ஓர் கல் அதிகம் கொடுக்கிறேன், மொத்தம் ஐந்து கல், அல்லது கொட்டை அல்லது ரூபாய் வைத்திருக்கிறேன். ஒவ்வொருவனுக்கும் எவ்வளவு என்று கேட்கலாம். செய்யும் வகை: சுந்தரத்துக்குக் கொடுக்கும் அளவே யாக்கோப்புக்கும் கொடுத்தால் எத்தனை ரூபாய் எனக்கு மீதியாகும்: பிள்ளைகள் சுலபமாய் இதைச் சொல்லுவார்கள். ஆகிலும் அநேகர் ஓர் ரூபாயென்று சொல்லுவார்கள். உபாத்தியாயர் இதைக்கொண்டு திருப்தியடையலாகாது. எனக்கு எவ்வளவு மீதியாகும்? சுந்தரத்தைவிட யாக்கோப்புக்கு எவ்வளவுக்கு அதிகம் கொடுக்கிறேனோ அது இப்போது எனக்கு மீதியாகும். கணக்கில் வகைசொல்லிக்கொடுக்கும்போது எண்ணால் பதில் சொல்வது அவ்வளவு பிரயோஜனமில்லை, காரணத்தைக் காட்டும் பதில் வேண்டும். எனக்கு மீதியிருப்பதை எடுத்து வைத்துவிட்டால், என்ன இருக்கும்? யாக்கோப்புக்கும் சுந்தரத்துக்கும் சம பாகமாகக் கொடுக்கும் பணம் இருக்கும். அது எவ்வளவு? ரூ. 5—ரூ. 1 =ரூ. 4. இதை எத்தனை பேருக்குச் சமமாகக் கொடுக்கிறேன்? இரண்டு பேருக்கு; அவ்வாறானால் ஒவ்வொருவருக்கும் என்ன வரும்? 4 ரூ./2=ரூ. 2. சுந்தரத்துக்கு என்ன கொடுக்கிறேன்? ரூ. 2. முதல் எண்ணப்பிரகாரம் யாக்கோப்புக்கு என்ன கொடுக்கிறேன்? சுந்தரத்துக்குக் கொடுப்பதைவிட ரூ. 1 அதிகம். அவ்வாறானால் யாக்கோப்புக்கு எத்தனை ரூபாய் தருகிறேன்? ரூ. 2 + ரூ. 1 ஆக மூன்று ரூபாய். இவ்வாறு பத்தெண்களுக்குள்ளேயே அநேக மனக்கணக்குகள் போடலாம். இதை மாணவர்கள் படித்தபின் மூன்று பேருக்குப் பாகம் போடும் சிறு கணக்குகளைச்

சொல்லி வைக்கலாம். என்னிடம் ரூ. 9 இருக்கின்றன; இதை ஜானகி, லூர்து, மரி என்னும் மூன்று பிள்ளைகளுக்குக் கொடுக்கிறேன். லூர்துக்கு மரியைவிட ரூபாய் 1 அதிகம் கொடுக்கிறேன்; ஜானகிக்கு லூர்தைவிட ரூ. 1 அதிகம் கொடுக்கிறேன்; அப்படியானால் ஒவ்வொருவருக்கும் என்ன கொடுக்கிறேன்? முன்போலவே இதையும் சொல்லிக்கொடுக்கலாகும். இதற்குப் பதிலாய்க் கணக்கை மாற்றிச் செய்யச்சொல்லிக் கற்பிப்பதும் பிரயோசனமாயிருக்கும். சுந்தரத்துக்கு ரூ. 2 கொடுக்கிறேன். யாக்கோப்புக்கு இதைவிட ஓர் ரூபாய் அதிகம் கொடுக்கிறேன். மொத்தம் எத்தனை ரூபாய் கொடுக்கிறேன்? புதுக்கணக்கைச் சொல்லிக்கொடுக்கும்போது முதல் முதல் அதே வகையான மனக்கணக்குகளைக் கற்பிப்பது உசிதம் என்று நினைக்கிறேன். சிலர் பெருங் கணக்குகளைக் கற்றுக்கொடுத்தபின் மனக்கணக்குகளைக் கற்பிப்பது நலம் என்பார்கள். கற்ற மற்ற பலவகைக் கணக்குகளையும் பிள்ளைகளுக்கு சிறிதுபொழுதில் நினைப்பூட்ட இது நல்லது, இதைக் கையாடுவது வெகு பிரயோஜனம்; ஆனால் பெரும் கணக்குகளைச் சொல்லிக்கொடுக்குமுன்னம், மனக்கணக்குகளைக் கற்பிப்பது தப்பிதமாகாது; அதிகப் பிரயோஜனம் என்றே சொல்லலாம்.

மேற்கூறிய உபாத்தியாயரைப்போல் கெட்டிக்கார உபாத்தியாயரை கிராமாந்தர பள்ளியில் பார்ப்பதே கஷ்டம். அவரே அப்படியானால் மற்ற உபாத்திமார்களைப்பற்றி என்ன சொல்லலாம்? ஆதலால் லோவர் கிரேட் உபாத்திமார்கள் வேண்டாமென்று மானேஜர்மார்களும் டைரக்டர்மார்களும் சொன்னால் இதில் என்ன குறையுண்டு? லோவர் கிரேட் உபாத்திமார்களிலும் கெட்டிக்காரர் சிலர் இருக்கின்றனர் என்பதற்கு ஐயமில்லை.

ஒரு பாடசாலை மானேஜர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக ...
182282
சென்னை-600 008

PERMISSU SUPERIORUM.
St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1929.